**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 185/2018**

பெயர் – திரு.செந்தில்முருகன் ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023ம் ஆண்டு ஜூன் திங்கள் 23–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை : –**

நான் இந்த மனுவில் மைனர் மனுதாரருக்கு அப்பா. எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. கூடன்குளம் காவல் நிலைய குற்ற எண். 40/2018 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1.**

2. பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2**

3. மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3.**

4. TN 72 AW 8416 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4.**

5. குற்ற அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5.**

6. குற்ற வழக்கில் அபராதம் செலுத்த பிறப்பித்த உத்தரவு **ம.சா.ஆ.6.**

7. காயச்சான்று **ம.சா.ஆ.7**

8. நாகர்கோவில் மனுவேல் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.06.23 19:28:59 +0530

சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.60,000/–க்குரியது **ம.சா.ஆ.8.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

9. நாகர்கோவில் மனுவேல் எலும்பு முறிவு மருத்துவமனையில் 2 வது முறை உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.10,300/–க்குரியது **ம.சா.ஆ.9.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

10. நாகர்கோவில் மனுவேல் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் மருந்து, மாத்திரை உள்ளிட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.16,083/–க்குரியது **ம.சா.ஆ.10.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

11. நாகர்கோவில் திரவியம் எலும்பு முறிவு மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்று **ம.சா.ஆ.11.**

12. எனது மற்றும் எனது மகன் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.12.**

13. எனது நிரந்தர கணக்கு அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.13.**

14. எனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.14.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்து சமயத்தில் என் மகனுக்கு 6 வயது. பிரிகேஜி படித்து கொண்டிருந்தார்.

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2023.06.23 19:29:05 +0530

தற்போது 6ம் வகுப்பு படித்து கொண்டிருக்கிறார். பள்ளிக்கூடத்தல் படித்து கொண்டிருந்தவர் என்பதால் விபத்தினால் எனக்கு எந்த வித இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது நல்ல முறையில் பள்ளிக்கூடம் சென்று கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு கன்னியாகுமரி – திருச்செந்தூர் மெயின் ரோடு அந்த ரோடு கார் பஸ் அதிகம் செல்லக்கூடிய பரபரப்பான ரோடு என்றால் சரிதான். விபதது சமயத்தில் என் பையன் விளையாட்டு தனமாக ரோடடை கடந்ததால் தான் விபதது என்றால் சரியல்ல விபத்துக்கு மோட்டார் வாகன ஓட்டுரின் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். விபத்து ஏற்படுத்திய மோட்டார்சைக்கிளின் பதிவென் தெரியாது என புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனு தாக்கல் செய்யும் போது 1ம் எதிர்மனதார் வாகனம் மோதி தான் விபத்து என ஆவணம் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்தியதாக நான் சொல்லும் இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் எங்கள் ஊர்க்காரர் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் எது என்று தெரியாமல் நானும் 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் இந்த மனுவில் ஆஜர் ஆகி அவர் தரப்பில் விபத்து குறித்து எந்த வித எடுததுரைப்பும் சொல்லவில்லை என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதார் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் காப்பீட்டு விதிமீறல் செயதுள்ளார் என்றால் சரியல்ல. விபத்தில் என் மகனுக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக விளையாடுவதில் பாதிப்பு படிப்பில் பாதிப்பு ஏற்பட்டதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவிற்காக காயத்தின் தன்மையை மிகைபடுத்தி சொன்னேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்துவமனை ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போக்குவரத்து மிகுந்த பகுதியில் 6 வயது சிறுவனை பாதுகாப்பு இல்லாமல் விளையாட அனுமதித்த வகையில் விளையாட அனுமதிதத வகையில் நானும் பங்களிப்பு அலட்சியவாதி என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் காப்பீட்டு விதிமீறல்

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2023.06.23 19:29:09 +0530

செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரிய இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – </u>இல்லை

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2023.06.23 19:29:20 +0530